IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# திருக்குறளில் புலால் மறுப்புச் சித்தாந்தம்

**முனைவர் செ.மார்கண்டன்**
இணைப் பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
பல்லாவரம்,சென்னை -117.

## முன்னுரை

வேட்டைச் சமூகத்தின் வழித் தோன்றலே தமிழ்ச் சமூகம். வேட்டையாடுவதை ஒரு தொழிலாகக் கொண்டு தமிழ்ச் சமூக வரலாறு கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தன் உணவுத் தேவைக்காக வீரத்தை வெளிக்காட்டவும், நவீன கருவிகளின் வழி தொடர்ந்து வேட்டையாடுபவன் தமிழன். இத்தகைய வேட்டை வாழ்வியலோடு தொடர்புடைய தமிழ் மரபின் பண்பாட்டை, வாழ்வியலைப் படைக்கும் வள்ளுவர் ஏன் புலால் மறுப்புச் சித்தாந்தத்தை முன்வைக்க வேண்டும்? என்ற வினாவின் தேடலே இக்கட்டுரை.

## சங்ககால புலால் நாற்றம்

தொடக்கக் காலங்களில், உலகின் அனைத்து இனத்தாருக்கும் புலால் உண்ணும் வழக்கம் இருந்துள்ளது. நிலத்தை உழுது பயிர் விளைவிக்கத் தெரியாத காலத்தில், மனிதன் விலங்குகளை வேட்டையாடி அவற்றை உண்ணும் நிலையில்தான் இருந்துள்ளான் என்பதை நாம் அறிவோம். சங்க இலக்கியங்களில் கொற்றவை, முருகன் முதலிய தெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு வணங்கியதோடு ஊன் உணவையும் உட்கொண்டுள்ளான் என்பதை நமக்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. ஆனால், பின்பு வந்த ஆரியம், முருகளை சுப்பிரமணியனாக்கி பலியிடுதலை தமிழருக்குபகையாக்கியது.

சங்ககாலத்தில் பொதுமக்கள் மட்டும் அல்ல, அரசரும், புலவரும் கூட இறைச்சியுணவை விரும்பி உண்டுள்ளனர் என்பதை உணர முடிகிறது. புறநானூற்றிலுள்ள ஔவையின் பாடல் ஒன்று அதற்குச் சான்று பகர்கிறது.

"**நரத்த நாறும் தன்கையாற்**
**புலவுநாறு மென்தலை தைவரு மன்னே"** (புறநா 235)

இப்பாடல் ஔவையும், அதியமானும் எலும்போடு கூடிய இறைச்சித் துண்டு (ஊன்தடி) உண்டு மகிழ்ந்த செய்தியைக் குறிப்பிடுகிறது. புலால் நாறும் ஔவையின் தலையை அதியமான் தடவிய செய்தியை நாம் அறிவோம்.

அகநாற்றில் 136 வது பாடலில், "**ஐம்புறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு**" என்று இறைச்சியோடு கூடிய நெய்கலந்த வெண்சோற்றை திருமணநாளில் சுற்றத்தாருக்கு விரும்பி அளித்த செய்தியையும் அறிய முடிகிறது. மேலும், நற்றினை 310 வது பாடலில் "**கன்றுபெறு வல்சி பாணன்**" என்று '**பாணன் கன்றைக் கொன்று விரைவாக உரித்தான்**' என்ற இத்தகைய செய்திகளை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

சங்க காலத்தில் புலால் உண்ணுதலை வழக்கமாக மேற்கொண்ட இச்சமூகம் கால மாற்றத்தின் காரணமாகவும், பிற ஆட்சி மாற்றங்களின் காரணமாகவும், சங்க மருவிய காலத்தில் புலால் உண்ணுதலைத் தவிர்க்கும் நெறியை மேற்கொள்ள விரும்பியிருக்கலாம். புலால் உண்ணுதலை இழிவாகவோ, முறையற்றதாகவோ கருதவில்லை என்பதைத்தான் மேலே கண்ட குறிப்புகள் உணர்த்துகின்றன.

**சமண,பௌத்த-திருக்குறள்**

சமண பௌத்த வளர்ச்சியின் சமகாலத்தில் தோன்றியதாகவே திருக்குறளை எண்ணலாம். சமண பௌத்தம், சமயம் சார்ந்து சொன்ன புலால் மறுப்பை திருக்குறள் சமூகம் சார்ந்து முன்வைத்துள்ளதைப் புரிந்துகொள்ளலாம். நம் நாட்டில் சமணம், பௌத்தம் போன்ற சமயங்களும் திருவள்ளுவரும் புலால் உண்பதற்கு எதிராகக் கொல்லாமையை வலியுறுத்தியதற்கு முக்கியக் காரணம் என்ன? விலங்குகள் அநியாயமாக வெட்டப்படுகின்றன என்ற இரக்க உணர்வால் மட்டுமா? அல்லது வேறு காரணம் உள்ளதா? என்பதை ஆராய்ந்து பர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. '**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**' என்ற வள்ளலாரின் கூற்றும் திருவள்ளுவரின் புலால் மறுத்தல் சித்தாந்தத்திற்கு பொருந்துவதாக இல்லை. தமிழிலக்கிய நெடுவரலாற்றில், வள்ளுவர்தான் முதன் முதலில், புலால் மறுத்தலை தமிழ் இலக்கியச் சூழலில் முன்வைப்பது கவனிக்கத்தக்கது.

**புலால் மறுப்பு- யாருக்கானது**

'**புலால் மறுப்பு**' என்னும் பொருண்மை பல காலமாக பெரும் விவாவத்தை நகர்த்தி வருகிறது. '**புலால் மறுப்பு துறவியர்க்கானது**' என்று ஒரு சாராரும், இல்லை, `**இல்லறத்தாரும் கடைப்பிடிக்க வேண்டியது**' என்று மற்றாரு சாராரும்

தொடர்ந்து விவாதிக்கும் சூழலை இப்பொருண்மை ஏற்படுத்தி வருகிறது. திருக்குறளின் உரைக்காரர்களின் வழி இவ்விவாதம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

புலால் மறுப்புக்கான சரியான காரணத்தை எட்ட வேண்டும் என்றால், உரைக்கராரர்களை தவிர்த்து, நேரடியாக வள்ளுவரை அணுகுவது ஒன்று, மற்றொன்று, திருக்குறள் எழுதப்பட்ட காலச் சூழல், மற்றும் சமூகப் பின்னணி, சமகால சமய அரசியல் இவைகளின் வழியே புலால் மறுப்புக்கான காரணத்தை கண்டறிய முடியும்.

**'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**
**மாடல்ல மற்ற யவை** (குறள்.400)

என்ற குறளில் மனித சமூகத்தின் வளமைச் செல்வமாக விளங்கியது கால்நடைகள். இதன் காரணமாகவே செல்வத்தை மாடு என்று குறித்துள்ளார் வள்ளுவர். இதன் மூலம் ஒரு குடும்பத்தின் செல்வத்தை மதிப்பிடுவதற்கு, அந்நாளில் கால்நடைகளைக் கொண்டு மதிப்பிட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

"**பௌத்த இலக்கியத்தின் வாயிலாகக் கசாப்புக்காரர்களாகச் செயல்பட்ட அந்தணர் பற்றி அறிய முடிகிறது. சுத்த நிபாதத்தில் வருணித்துள்ளபடி, கோசலநாட்டு மன்னன் பசேந்தி கொடுத்த பலியின் விவரமாவது**, 500 **எருது**, 500**காளை**, 500**பசுக்கள்**, 500**செம்மறியாடுகள் ஆகியவை பலியிடுவதற்காகக் கம்பங்களில் கட்டப்பட்டிருந்தன. அந்தணர் இட்ட கட்டளையைக் கண்களில் நீர் ததும்ப அரசரின் ஏவலாட்கள். நிறைவேற்றினார்களாம்**" (கி.வீரமணி, குறன் கிளத்தும் சிந்தனைகள், 2014; 27) இக்கருத்தை டாக்டர் அம்பேத்கரின் தொகுப்பு 7 -ல் காண முடிவதாக வீரமணி கூறுவது குறிப்பிடத்தக்கது.

"**வேள்வியில் பலியிட்டதால் அழிவின் விளிம்பில் இருந்த கால்நடைகளை எப்படியாவது காப்பாற்றப்பட வேண்டும் என்ற அவசரத் தேவையே கொல்லாமையையும் ஊன் உண்ணாமையையும் ஆகிய ஒன்றில் இரண்டான** (Two in one) **கருத்தியலை உருவாக்கியது. வைதீகத்தின் இந்த வேள்வி படுகொலையைச் சமணமும், பௌத்தமும் முரண்பட்டு எதிர்த்தன**" (கி.வீரமணி, குறன் கிளத்தும் சிந்தனைகள், 2014;28) இத்தகைய கருத்தின் வழி கால்நடைகளின் பேரழிவை தடுக்கவும், மனித சமூகத்தை காப்பாற்றவுமே வள்ளுவர் புலால் மறுத்தலை வலியுறுதியுள்ளார். இக்கருத்தை பரிமேலழகர், '**உண்ணப்படும் விலங்குகள் அதனால் தேய்ந்து சிலவாக ஏனைய பலவாய் வருவதலின் உண்ணாமையுள்ளது உயிர்நிலை**' என்ற கருத்து மேலும் வலுசேர்க்கிறது.

**புலால் மறுப்பு-இல்லறத்தார்க்கு அல்ல**

இல்லற வாழ்வில் ஈடுபடுவோரை நோக்கி வள்ளூார் புலால் மறுப்பை கூறவில்லை, என்ற கருந்தை முன்வைப்பவர்கள் எடுத்து வைக்கும் குறளாக பின்வரும் குறளை நோக்கலாம். ஊன் விரும்பிகள் தங்களுக்குச் சாதகமாக முன் வைக்கும் குறள், மேலும், உரைக்காரர்களின் சார்புத் தன்மையுடனும் இத்தகைய விளக்கங்களை விளங்கிக் கொள்ளலாம்.

"**அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயர்செகுத் துண்ணாமை நன்று**" (குறள்,259)

அவிசொரிந்து வேள்வி செய்வதைவிட ஓர் உயிரைக் கொன்று உண்ணாதிருத்தல் நன்று என்பது இக்குறளின் பொருள். புவியிலே, அவிசொரிந்து (நெய் வார்த்து வேள்வி செய்வோர் யார் ? முனிவர்கள். ஆகவே அவர்கள் மட்டும்தான் உயிரைக் கொன்று உண்ணக் கூடாது. பிறரெல்லாம் 'புலால் உண்ணலாம்' என்று தனக்கு சாதகமாக்கி இக்குறளுக்கான விளக்கத்தை முன் வைக்கின்றனர். இத்தகைய சிக்கலைத் தீர்க்க நாம் வள்ளுவரை நாடுதல் சாலச் சிறந்தது. இவ்விளக்கங்கள் ஏற்புடையதா? என்பதை அறிய புலால் மறுத்தல் அதிகாரத்தை அனுகலாம். 'புலால் மறுத்தல்', அதிகாரத்தின் ஆறாம் குறளை நோக்கலாம்.

"**தினற்பொருட்டால் கொல்லாது உலகெனில் யாரும்**
**விலைப்பொருட்டால் ஊன் தருவார்இல்**. (குறள்:256)

இதள் விளக்கம் பேதமை காரணமாக அல்லது ஊன் உண்பதின் காரணமாக உயிரைக் கொல்வது. இங்கு 'உலகு' என்ற சொல்லாடல் துறவியார்க்கும், இல்லறத்தார்க்கும் சேர்த்தே சொல்லப்பட்டது என்பதை விளக்குவதாகும். சமணமும், பௌத்தமும் இதே கருத்தை வலியுறுத்துவதாலும், திருக்குறளின் கருத்து ஒட்டுமொத்த சமூகத்தின் குரலாகவே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், உன்மையில் இக்கருத்து வேள்வியின் வழியாக பெரும் உயிர்பலியைச் செய்த பிராமணர்களுக்கு எதிரான குறளாகவே இருந்திருக்கும் என்பது எதார்த்தம்.

'**கொன்றால் பாவம், தின்றால் போகும்**' என்ற பழமொழி பௌத்த நெறியை உள்ளடக்கியவையாக, பிற்காலச் சூழலில் இத்தகைய பழமொழி உருவாகியிருக்கலாம். புலால் உண்பவனையும், கொலை செய்பவணையும் சாடும் குரலாக வள்ளுவரின் குறள் ஒலிக்கிறது. பௌத்த நெறியும், வள்ளுவமும் சில புள்ளிகளில் வேறுபட்டாலும் கொல்லாமை கருத்தை ஒன்று சேர்ந்தே வலியுறுத்துகிறது. இக்கருத்தை அன்றைய ஒட்டுமொத்த சமூகத்தின் குரலாக பார்க்க முடிகிறது.

ஊன் தின்பதற்காக ஓர் உயிரைக் கொன்றால், அக்கொலைக் குற்றம் அதைக் கொன்றவனைச் சாருமே அன்றி அதன் ஊனைத் தின்றவனைச் சாராது என்பது புத்த சமய அறநெறியாகும். கொன்றால் தான் பாவம் ஏற்கனவே கொல்லப்பட்டதைத் தின்றால் பாவம் இல்லை என்னும் புத்தமதக் கொள்கைக்கு எதிர் நிலையில் வள்ளுவர், கொல்வது, தின்பது. இரண்டுமே அறநெறி அன்று என்று தீர்க்கமாக புலால் மறுப்பை சமூகத்திற்கு வெளிப்படுத்துகிறார்.

**பிராமண எதிர்ப்பே புலால் மறுப்பு**

"**தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுன்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள்** (குறள் ; 251)

தன் சதையைப் வளர்ப்பதற்கு பிறிதோர் உயிரின் தசையைத் தின்பவன். எப்படி உயிர்களுக்கு எல்லாம் அருள் செய்பவனாக இருக்க முடியும். பிராமணர்கள் செய்யும் வேள்விகளின் விளைவாகவே உதித்த கருத்தே புலால் மறுப்பாகும். வேள்விகள் வழியாக கிடைக்கும் ஊன் உணவை உண்ணும் பார்ப்பணர்கள் கடவுளின் வழியாக எப்படி (அருளை) பெற்று தர முடியும். வேள்விகளின் வழியாக மக்களிடமும், மன்னனிடமும் ஆதிக்கம் செலுத்திய பிராமணர்களை எதிர்க்கும் குரலாகவே `**புலால் மறுத்தலை**" வள்ளுவர் படைத்திருக்கலாம்.

வேளாளர்கள் மாட்டை வேள்விக்குத் தருவதை நிறுத்தினார்கள். மாடு தின்றால் கடவுளை அடையளாம் என்று மக்கள் நம்ப மறுத்தனர். மாட்டுக்கறி, பன்றி எல்லாம் தமிழர் உணவே ஆகும், மரக்கரி உணவு வடக்கே இருந்து வந்த சமண உணவுமுறையாகும். யாகம் , வேள்வி போல மரக்கரி உணவும் தமிழருக்குத் தொடர்பற்ற ஒரு மதசடங்கு மட்டுமே. பிராமணர்கள் வேள்விக் காலங்களில் பசுவதையை எப்பொழுதும் தடுத்தது கிடையாது. எனவே, பிராமணர்களை சாடும் விதமாகவே எழுதப்பட்டது தான் புலால் மறுப்பு.

"**அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயர்செகுத் துண்ணாமை நன்று**" (குறள்,259)

இக்குறளுக்கான விளக்கமாக சிற்பி பாலசுப்பிரமணியம் பின்வரும் விளக்கங்களைத் தருகிறார். "**உயிரினங்களைப் பலியிட்டு ஆயிரம் வேள்விகள் செய்வதை விட ஒரே ஒரு உயிரைக்கூட உணவுக்காக கொல்லாமல் இருப்பது பல மடங்கு மேலானது. வேள்வியை, முன்னரும் மறுத்தது போல இங்கும் மறுக்கிறார்.**" (சிற்பி பாலசுப்பிரமணியம்: திருக்குறள், 2016 :53)

இத்தகைய விளக்கங்கள் மூல நூலின் மன சாட்சியாக இருக்கக் கூடும். வள்ளுவர் சமூகத்திற்கு சொல்ல முனைந்ததை சில உரைக்காரர்கள் தொட்டும், சிலர் விட்டும், சிலர் மாற்றியும் தன் சுயச்சார்பு தன்மையுடன் விளக்கி வருவது திருக்குறளின் உயிர்ப்புத் தன்மையை அழிப்பதாக அமைந்து விடுகிறது. எனவே, திருக்குறளுக்கு புதிய உரையாக பிராமண வேத மரபுகளை எதிர்க்க எழுந்த

குறளாகவும் உரை எழுத வேண்டிய தேவை ஏற்படுகிறது.

"**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கம் கடை**" (குறள்,328)

இக்குறளுக்கு மணக்குடவரின் உரை ஒப்பு நோக்கத் தக்கதாகும். '**நன்மை யாகும் ஆக்கம் பெரிதேயாயினும், ஒருயிரைக் கொன்று ஆகின்ற ஆக்கம் உயர்ந்தோர்க்கு ஆகாது**' வேள்வியால் நல்ல ஆக்கம் கிடைப்பதாக இருந்தாலும் உயிர்களை (வேள்வியில்) கொல்வதினால் கிடைக்கக் கூடிய ஆக்கத்தைச் சான்றோர் இழிவாக கருதியுள்ளனர். இங்கு வேள்வியையும் அதனால் ஏற்படக் கூடிய உயிர்க் கொலையையும் வெளிப்படையாக வள்ளுவர் மறுப்பதாக தெரிகிறது. மேலும், மணக்குடவர் இங்கு வேள்வியைக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் வள்ளுவரின் கொள்கையை நன்கு உணரலாம்.

"**சமண பௌத்த சமயங்களைப் போலவே வள்ளுவரும் அவர்களின் நோக்கிலேயே வேள்வியை மறுத்தவராவார். வடபுலத்தில் ஆயிரமாயிரம் வேள்விகளில் கணக்கற்ற கால்நடைகள் கொல்லப் பட்டதால், நாட்டின் பொருளாதாரம், மனித வாழ்க்கையும் கேள்விக்கு உள்ளானதால் தான் சமணமும் பௌத்தமும் கொல்லாமையைச் சமய நெறியாகவும், சமுதாய அறமாகவும் வளர்த்தன. அந்தத் தாக்குரவும், தமிழகச் சூழலுமே வள்ளுவரைக் கொல்லாமையும், ஊன் உண்ணாமையும் பேச வைத்தது. இவ்விரு அதிகாரங்கள் சமூகப் பொருளாதாரத் தேவைக்காக உருவாக்கப் பட்டதேயன்றி, வெறும் உயிர் இரக்கத்தாலோ, பாவ,புண்ணியத்தைக் கருதியதாலோ உருவாக்கப்பட்டதல்ல என்பதை ஆய்வாளர் உளங்கொள்ள வேண்டும்**" (கி.வீரமணி: குறள் கிளத்தும் சிந்தனைகள்;2014;30) இக்கருத்தின் வழி அன்றைய சமூகத்தின் பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்யவும் மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்த கால்நடைகளை காப்பாற்றவும், பசிப்பிணி, பஞ்சத்தைப் போக்கி மக்களைக் காப்பாற்ற சமண, பௌத்தத்துடன் சேர்ந்து திருவள்ளுவரும் கொல்லாமை, புலால் மறுத்தல் சித்தாந்த அறத்தை உருவாக்கி உள்ளார்.

**புரோகித மாயை - வேள்வி**

வைதீகப் புரோகிதர்கள் சமுதாயத்தில் தங்களது உயர்நிலையைத் தக்க வைத்துக் கொள்ள வேள்விகளை மறைமுக ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள் என்பதை வேத உபநிடதங்களிலிருந்தும், வியாசரின் பாரதத்திலிருந்தும், மனுவிலிருந்தும் அறியலாம். வேதியரின் வேள்விகளில் மாடு, ஆடு, குதிரை இடுதலைக் கண்டித்தது திருக்குறள். தேவாரத்தில் மாடு வெட்டி யாகம் செய்யும் செய்திகளைக் காணமுடிகிறது. மேலும், மாடு வெட்டி யாகம் செய்தால் கடவுள் வரமாட்டான் என்று பலியிடுதலை மாற்றியது பிற்கால வரலாறு. அதே போல

பிச்சைப் பாத்திரத்தில் இட்ட ஊனைத் தின்னலாம் என்று '**புலால் மறுப்பு**' தளர்வு செய்து கொண்டது பௌத்தம். இந்த பௌத்த தளர்வைக் கண்டித்தது வள்ளுவம்.

வேள்விகளின் வழியாகவும், செல்வ செழிப்பையும், அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்டனர் பிராமணர்கள். உயிர்வாழ சாமான்ய மக்களைப் போல் உழைத்து பணியாற்றுவது 'உயர்ந்த' இனமான பிராமாணர்களுக்கு இழிவானதாக தெரிந்துள்ளது.

மரியாதை மிக்கப் பணிகளைச் செய்தும், உடல் உழைப்பற்ற வேலைகளைச் செய்தும் வருமானம் கிடைக்கும் தொழிலான வேள்வி, மந்திர சடங்குகளைக் கையில் எடுத்தனர். பிராமணர்களின் சடங்குகள் தவிர்க்க முடியாத அளவில் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியது. இத்தகைய தேவையற்ற சடங்குகளின் வழி உயிர் பலியிடுதலைத் தவிர்க்க சமண பௌத்த மதத்துடன் திருக்குறளும் 'புலால் மறுப்பு' என்ற சித்தாந்தத்தைக் கட்டளையிட்டது.

"**போர் புரிந்தும், கடினமாக உழைத்தும் பணம் சம்பாதிப்பவர்களை சுரண்டி அவர்களிடமிருந்து தங்களுக்கு வேண்டியதைக் கைப்பற்றும் பாதுகாப்பான ஏற்பாட்டை புரோகிதர்கள் தங்களுடைய வயிற்றுப்பிழைப்புக்காக தாங்களே மேற்கொண்டனர். கோயில்கள், புன்னியத்தலங்கள், உற்சவங்கள், பூஜைகள், புனித யாத்திரைகள், ரகசிய வித்தைகள், மந்திர தந்திரங்கள் என இந்து மதம் தொடர்பான பல்வேறு ஏற்பாடுகளின் தலையாய நோக்கமே பிராமணர்கள் அல்லாத மக்களை மயக்கிச் சுரண்டி பிராமணர்கள் ஆதாயமடைவதுதான்**" (தர்ம தீர்த்த அடிகளார் ; இந்துமதக் கொடுங்கோன்மை வரலாறு ; 2003,172) ( தமிழில் வெ.கோ.பாலகிருஷ்ணன்)

கடவுளிடமிருந்து உடனடிப் பயனுக்காகத் தெய்வங்களுக்கு பலியிடத் தொடங்கினான் மனிதன். இந்த பலியிடும் முறையே பின்னாளில் தனக்கு சாதமான வேள்வியாக மாற்றினான் பிராமணர்கள். இந்த வேள்வியை நிகழ்த்த புரோகித வர்க்கமும் உடன் தோன்றியுள்ளது. மன்னர்களின் பேராசையைத் தூண்டி நீண்ட நாள் அரசாளவும், மழை வேண்டியும், நோய்நொடிகளில் இருந்து காப்பாற்றவும், செல்வ ஆதாரங்களைப் பெருக்கவும் வேள்விகள் வழியே நிறைவு பெறும் என்று நம்ப வைத்தனர். இதன் நீட்சியே இன்றளவும் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத சடங்குகள் நடைபெறுகின்றன. இவற்றிற்கான எதிர் குரலாகவே திருக்குறளில் மனித அறம் தோன்றலாயின. அதன் ஒரு வடிவமே புலால் மறுப்பு ஆகும்.

**"பிராமணர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த தான தர்மங்களுக்கு எந்த தடங்கலுமேற்படவில்லை. ஆயினும் பிராமண மதத்தின் முக்கியத்துவம் குறைய ஆரம்பித்தது. மிருகங்களைப் பலியிடும் யாகங்கள் கைவிடப்பட்டதனால் பிராமணர்களுக்கு, அவர்களுடைய தொழிலும். வருவாய் வழியும் செல்வாக்குச் சக்தியும் பறிபோயின"** (மேலது : ப.98)

இத்தகைய கூற்றுகளின் வழி அறிவது, திருக்குறளின் கருத்தான '**புலால் மறுப்பு**' என்பது பிராமணர்களுக்கு எதிரான கருத்தாகவே கொள்ள நேர்கிறது. மக்களையும், மன்னர்களையும் ஏமாற்றி யாகம், வேள்விகளின் வழி வேளாண் பொருளாதாரத்தின் மையமான கால்நடைகளைக் கொன்று குவிக்கும் பிராமணர்களை நோக்கி எழுப்பிய எதிர்ப்புக்குரலாகவே புலால் மறுப்பைக் காண முடிகிறது.

## முடிவுரை

சமணமும், பௌத்தமும் கொல்லாமையைப் பேரறமாக நாடு முழுவதும் பரப்புரை செய்து வந்துள்ளதை அறிவோம். இந்த பரப்புரை தமிழகத்திலும் சமண பௌத்தர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இச்சமூக சூழலுக்கேற்ப வள்ளுவரும் கொல்லாமை, புலால் மறுப்பு சித்தாந்தத்தை கடுமையாக்க முயன்றிருக்கலாம். பிராமணர்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் சித்தாந்தமே திருவள்ளுவரின் '**புலால் மறுப்பு**' சிந்தனையாகும். பிராமண பிழைப்பு வாதத்திற்காக, சமண, பௌத்தக் கோட்பாடுகளை பிராமண சமயங்கள் ஊடுருவி அழித்த வரலாறு நாம் அறிந்ததே.

பிராமணர்களுக்கு எதிராக செயல்பட்ட காரணத்தினாலே நீதிநூல்கள் தோன்றிய சங்கம் மருவிய காலத்தை '**இருண்ட காலம்**' என்று வரலாற்றில் பதிவு செய்தது இந்து தர்மம் ஆகும். எனவே, இனியேனும், ஆய்வாளர்கள் திருக்குறளை பிராமணர்களுக்கு எதிரான கருத்தியலுடன் ஆராய்ந்து, புதிய நோக்கில் மாற்று உரை எழுதுவது தமிழிலக்கிய ஆய்வுலகில் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

## துணைநின்ற நூல்கள்

1. **புறநானூறு**, ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், 127, ப.எண்;63,பிரகாசம் சாலை,பிராட்வே,சென்னை-108

2. **அகநானூறு**, ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், 127, ப.எண்;63,பிரகாசம் சாலை,பிராட்வே,சென்னை-108

3. **திருக்குறள்** - சிற்பி பாலசுப்பிரமணியம், 2016, பக்-83, பக்-53 தாமரை பப்ளிகேஷன்ஸ்(பி)லிட்., 41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர்,சென்னை-600098.

4. **குறள் கிளத்தும் சிந்தனைகள்**, கி.வீரமணி, 2014,பக்-27 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு,1 பாரிமுனை

5. **தர்ம தீர்த்த அடிகளார்** - இந்துமதக் கொடுங்கோன்மையின் வரலாறு, 2003: பக்:172, (தமிழில்: வெ.கோ, பாலகிருஷ்ணன்)